**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 103/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | சரஸ்வதி |
| Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | தலாபாளையம் |
| Taluk | : | கரூர் |
| Age | : | 60 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூரி குடியிருந்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகம் இல்லை. எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக எனது மகளுக்கு பெருமாள் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னதாக என்னிடம் எனது மகள் கூறினார். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோ யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை யார் ஓட்டிவந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் சொல்லியபடி புகார் எழுதப்பட்டு அதில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் என்றால் சரியல்ல. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக

புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தானது ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.03 19:26:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 103/2024 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | பெருமாள் |
| Father Name | : | மாரன் |
| Village | : | சென்னிமலை |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 50 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னிமலையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சென்னிமலை செல்வதற்காக முத்தூரில் இருந்து நத்தக்காடையூர் ரோட்டில் செல்லும்போது நத்தக்கடையூருக்கு அருகே நான் வேலைக்கு செல்வதன் மூலம் பழக்கமான ராஜேந்திரன் என்பவருடன் நானும் அவரும் டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது அவ்வழியாக சென்ற டெம்போ மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. விபத்தில் ராஜேந்திரனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு லேசான காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் அருகில் இருந்தவர்கள் ஆம்பிலன்ஸிற்கு தகவல் சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல பரிந்துரைத்தார்கள். அங்கு சென்று மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு ராஜேந்திரன் இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த ரோடு கிழ மேல் ரோடு என்றால் சரிதான். நாங்கள் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தோம் என்றால் சரிதான். ரோட்டின் நடுப்பகுதியில் வெள்ளைக்கோடு உள்ளது என்றால் சரிதான்.

வெள்ளைக்கோட்டின் மத்தியில் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவானது யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு ஆட்டோ யாருக்கு சொந்தமானது என்று விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த ராஜேந்திரன் விபத்தின்போது மது அருந்திவிட்டுத்தான் வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும் விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவானது யாருக்கு சொந்தமானது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன ராஜேந்திரன் எனது நண்பர் ஆவார். விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.03 19:26:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 103/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | சதீஸ் |
| Father Name | : | ஆறுமுகம் |
| Village | : | குட்டப்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 34 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது குட்டப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு மாலை சுமார் 6.00 மணியளவில் நத்தக்காடையூர் – முத்தூர் ரோட்டில் உள்ள எனது தோட்டத்தில் நான் இருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. அங்கு சென்றுபார்த்தபோது டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் வந்தவர் மீது டெம்போ மோதி விபத்து ஏற்பட்டு இருவரில் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் யாருடைய வாகனம் என்று தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை விபத்து சமயத்தில் யார் ஓட்டி வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தானது ரோட்டின் மையப்பகுதியில் நடைபெற்றது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ராஜேந்திரன் மதுபோதையில் இருந்தார் என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதால் விபத்து நஷ்ட ஈடு

பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.03 19:26:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 103/2024 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | கண்மணி |
| Husband Name | : | மகேந்திரன் |
| Village | : | செஞ்சேரிபிரிவு |
| Taluk | : | பொள்ளாச்சி |
| Age | : | 28 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பொள்ளாச்சி குடியிருந்து வருகிறேன். கடந்த 24.12.2023 ஆம் தேதியன்று எனது அப்பா எங்களிடம் வேலைக்கு செல்வதாக சொல்லிவிட்டு பெருமாள் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது டெம்போ இடித்து விபத்து ஏற்பட்டுவிட்டதாக பெருமாள் என்பவர் எனது மச்சான்டார் மகன் ஜீவா என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர் ஜீவா எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். நானும், எனது கணவரும் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். விபத்தில் எனது அப்பாவிற்கு தலையில் பலத்த அடிபட்டிருந்தது. பின்னர் சிகிச்சை பலனின்றி எனது அப்பா இறந்துவிட்டார். எனது அப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோ யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை யார் ஓட்டிவந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி எனது தாயார்

கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.03 19:26:22 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 103/2024 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | தங்கவேல் |
| Father Name | : | செல்லப்பன் |
| Village | : | நத்தக்காடையூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 65 |

**All accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தக்கடையூரில் குடியிருந்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் செந்தில் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் பூர்த்தி செய்யப்படாத தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.03 19:26:30 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்